15th February 1958]

Commercial Crops

* 143 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the names of districts where regulated markets have been established or proposed to be established for various commercial crops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Regulated markets have been established in Coimbatore district in respect of cotton, groundnut, tobacco and turmeric, in South Arcot district in respect of groundnut, cotton and gingelly, in North Arcot district in respect of groundnut, and in Tirunelveli district in respect of cotton. Regulated markets for groundnut and tobacco in Tiruchirappalli district are also expected to be set up shortly.

SRI N. K. PALANISAMI : இந்த மார்க்கெட்டுகளில் பருத்தி, கடலை முதலிய பொருள்களை கமிஷனுக்குத் தான் விற்றுக்கொடுக்கிறார்கள். அப்படியில்லாமல் இந்த மார்க்கெட்டுகளில் அவைகளை வாங்கி விற்றுக்கொடுக்கும்படியான அளவில் செய்தால் தான் இது வெற்றிகரமாக நடக்கும். இம்மாதிரி திருத்தம் கொண்டு வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிட்டி இந்த மார்க்கெடிங் விஷயத்தைப்பற்றி பரிசீலனைசெய்து சிபார்சுகளை அனுப்பியிருக்கிறது. அந்த சிபார்சுகள் இப்பொழுது கவனிக்கப்பட்டு ஒவ்வொன்றாக அமுலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

MR. SPEAKER : Next question, No. 144.

THE HON. SRI R. VENKATARAMAN : I would request that this question may be postponed.

MR. SPEAKER : To next session? I have got a copy of the answer with me.

THE HON. SRI R. VENKATARAMAN : To next sitting* because I have not got the file with me. It has not been circulated to me.

Air Ports

* 145 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any new air port is proposed to be opened in the State; and

(*b*) whether any shuttle air service is proposed to be run in the State connecting the major towns?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir.

SRI A. GOVINDASAMY : ஏற்கனவே உளுந்தூர்பேட்டையில் விமான நிலையம் இருக்கிறது. அடிக்கடி மந்திரிகள் அந்தப் பக்கம் போகிறார்கள். அதை புதுப்பிப்பதற்கு நமது அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி ஏற்கனவே அமைக்கப்பட்ட விமான நிலையங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளையெல்லாம் நாம் எடுத்துக்கொள்ளுவது சாத்தியமல்ல. எந்த அளவுக்கு அவசியமோ அந்த அளவுக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

* The question was answered on 4th March 1958.